செ.வெ.எண் : 360 நாள் : 17.06.11

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் விரைவாகவும், செம்மையாகவும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், பதவியேற்ற அன்றே ஏழு முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து அதற்குரிய கோப்புகளில் கையெழுத்திட்டார்கள். முதியோர், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு மேற்காணும் ஒய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன் பெறும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த 500 ரூபாய் மாத ஒய்வூதியத்தை 1000 ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16.5.2011 அன்று ஆணையிட்டு 6.6.2011 அன்று இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்ட இந்த ஒய்வூதியத்தை இந்த மாதம் முதலே அனைவரும் பெறலாம் என்றும் அறிவித்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்தின் கீழ் செயல்படுத்தப்படும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம், மனவளர்ச்சி குன்றியோருக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் மற்றும் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கும் மாதாந்திர உதவித் தொகையை 500/- ரூபாயிலிருந்து 1000/- ரூபாயாக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.6.2011 அன்று ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ள இந்த உத்தரவின் மூலம் 76,407 மாற்றுத்திறனாளிகள் பயன் பெறுவார்கள். மேலும், இத்திட்டம் செயல்படுத்தப்படுவதால் அரசுக்கு ஆண்டுக்கு சுமார் 46 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9

நாள்: 17.6.2011

ஒ/-

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9